05.02.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண்.24/2016</u>

அ.சா.16

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நந்தினி | | |
| க/பெ | மலையப்பன் | மதம் | |
| கிராமம் | வண்டலூர் | தொழில் | |
| தாலுக்கா | சென்னை | வயது | 30/2024 |
| மாவட்டம் | சென்னை | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். மூர்த்தி மகன் ஐய்யப்பன் (1ம் எதிரி) என் கணவர் ஆவார். நான் தற்போது மேற்படி மலையப்பன் என்பவரை வேறு திருமணம் செய்துகொண்டேன். அவருடன் இருப்பவர் பெயர் அன்பு ஆகும். அவரை எனக்கு தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன சரவணன் என் சொந்த அண்ணன் ஆவார். ( இந்த வழக்கில் இவர்கள் இருவரை தவிர அன்பு என்கிற அன்பழகன் என்பவரையும் எனக்கு தெரியும். 2011ம் ஆண்டில் எனக்கும் 1ம் எதிரி ஐயப்பனுக்கும் திருமணம் நடந்தது. எங்களுக்கு திருமணமாகி குமரேசன் மற்றும் மகள் சாருலதா ஆகியோர் உள்ளனர். எங்களுக்குள் சிறு சிறு தகராறுகள் இருக்கும். அப்போது 1ம் எதிரி என்னை தாய் வீடு செல்ல விடமாட்டார். அப்போது எல்லாம் இது போன்று பல தகராறுகள் நடந்துள்ளது. நான் ஒரு நாள் என் அண்ணன் சரவணனுக்கு சண்டை சம்மந்தமாக போனில் தகவல் தெரிவித்தேன். அவர் வந்து என்னை என் அம்மா வீட்டிற்கு அழைத்து சென்றார். அதன் பிறகு என் அம்மா வீட்டிற்கு என் கணவர் 1ம் எதிரி அவரது அப்பா மூர்த்தியும், என் தாய் வீட்டிற்கு வந்தார்கள். அப்போது என் அண்ணன் அவர்களை நியாயம் கேட்டு இருவரையும் அடிக்க சென்றார். அதன் பிறகு அவர்கள் சென்று விட்டார்கள். அதன் பிறகு ஒருநாள் என் உறவினர் பாபு என்பவர் சுமார்

13 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 11 மணி அளவில் போன் மூலமாக என் அண்ணன் சரவணனை அரியலூர் ஒரு ஓட்டல் பின்புறம் வைத்து என் கணவர், எதிரி அன்பு மற்றும் மற்றொரு ஐயப்பன் சேர்ந்து கொலை செய்துவிட்டதாக எனக்கு தெரிவித்தார். அதன் பிறகு எனது அண்ணனின் பிரேதத்தை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சென்று பார்த்தோம். இது சம்மந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு சம்பவம் குறித்து நேரடியாக எதுவும் தெரியாது. நான் போன் செய்த பிறகு தான் வந்தேன். அரியலூரில் தான் எனது அண்ணன் இருக்கிறார். இரவு சம்பவம் நடந்தது. காலை சென்று பார்த்ததாக கூறிவிட்டு சாட்சி தற்போது முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு சென்று பார்த்ததாக கூறுகிறார். நான் அன்று காவல் நிலையத்திற்கு வந்தேன். எதிரிகளை பார்த்தேன். நான் அன்று மூன்று பேரை பார்த்தேன். சம்பவத்திற்கு மறுநாள் காலையிலேயே மூன்று பேரையும் காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன். நான் எதிரிகளின் உடையில் இரத்த கறையை பார்த்தேனா என்றால் மூன்றாம் எதிரியின் உடலில் இரத்த கறையை பார்த்தேன். இது சம்மந்தமாக நான் காவல் துறையில் காண்பித்தேனா என்றால் இல்லை. காவல் துறையினர் விசாரணையில் நான் அன்பழகன் என்கிற அன்பு ராக்கி ரமேசுடன் வேலை செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ராக்கி ரமேஷ் எனக்கு சித்தப்பா முறையாகும். அவர் என்ன வேலை செய்துக்கொண்டிருந்தார் என்று எனக்கு தெரியாது. ராக்கி ரமேஷ் மீது நிறைய கொலை வழக்குகள் உள்ளதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது அண்ணனுக்கும், ராக்கி ரமேசுக்கும் இடையே முன்விரோதம் எதுவும் இல்லை. என் அண்ணன் ராக்கி ரமேசுடன் நன்றாக பழகுவார் என்றும் , போவார், வருவார் என்றால் சரிதான். ராக்கி ரமேசுடன் சென்ற எனது அண்ணன் அவர் செய்த கொலைகளில் தொடர்புடையவர் என்பதால் அவர்களால் பாதிக்கப்பட்ட நபர் என் அண்ணனை கொலை செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எனக்கு கெடாரில் காவல் நிலையம் மூலம் தகவல் சொன்னார்கள். எனக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும், 1ம் பிரதிவாதி என்னை வைத்து வாழவில்லை என்பதால் சம்பவத்தை பற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

***3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லாததால் 3ம் பிரதிவாதி***

***தரப்பின் வாய்ப்பு முடிக்கப்பட்டது.***

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

05.02.2024

<u>கூடுதல் அமா்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமா்வு வழக்கு எண்.24/2016</u>

அ.சா.16

| | | | |
|---|---|---|---|
| பெயா் | நந்தினி | | |
| க/பெ | மலையப்பன் | மதம் | |
| கிராமம் | வண்டலூா் | தொழில் | |
| தாலுக்கா | சென்னை | வயது | 30/2024 |
| மாவட்டம் | சென்னை | தேதி | |

இன்று உதவியாளா் அவா்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறாா்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். மூா்த்தி மகன் ஐய்யப்பன் (1ம் எதிரி) என் கணவா் ஆவாா். நான் தற்போது மேற்படி மலையப்பன் என்பவரை வேறு திருமணம் செய்துகொண்டேன். அவருடன் இருப்பவா் பெயா் அன்பு ஆகும். அவரை எனக்கு தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன சரவணன் என் சொந்த அண்ணன் ஆவாா். ( இந்த வழக்கில் இவா்கள் இருவரை தவிர அன்பு என்கிற அன்பழகன் என்பவரையும் எனக்கு தெரியும். 2011ம் ஆண்டில் எனக்கும் 1ம் எதிரி ஐயப்பனுக்கும் திருமணம் நடந்தது. எங்களுக்கு திருமணமாகி குமரேசன் மற்றும் மகள் சாருலதா ஆகியோா் உள்ளனா். எங்களுக்குள் சிறு சிறு தகராறுகள் இருக்கும். அப்போது 1ம் எதிரி என்னை தாய் வீடு செல்ல விடமாட்டாா். அப்போது எல்லாம் இது போன்று பல தகராறுகள் நடந்துள்ளது. நான் ஒரு நாள் என் அண்ணன் சரவணனுக்கு சண்டை சம்மந்தமாக போனில் தகவல் தெரிவித்தேன். அவா் வந்து என்னை என் அம்மா வீட்டிற்கு அழைத்து சென்றாா். அதன் பிறகு என் அம்மா வீட்டிற்கு என் கணவா் 1ம் எதிரி அவரது அப்பா மூா்த்தியும், என் தாய் வீட்டிற்கு வந்தாா்கள்.

அப்போது என் அண்ணன் அவர்களை நியாயம் கேட்டு இருவரையும் அடிக்க சென்றார். அதன் பிறகு அவர்கள் சென்று விட்டார்கள். அதன் பிறகு ஒருநாள் என் உறவினர் பாபு என்பவர் சுமார் 13 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 11 மணி அளவில் போன் மூலமாக என் அண்ணன் சரவணனை அரியலூர் ஒரு ஓட்டல் பின்புறம் வைத்து என் கணவர், எதிரி அன்பு மற்றும் மற்றொரு ஐயப்பன் சேர்ந்து கொலை செய்துவிட்டதாக எனக்கு தெரிவித்தார். அதன் பிறகு எனது அண்ணனின் பிரேதத்தை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சென்று பார்த்தோம். இது சம்மந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு சம்பவம் குறித்து நேரடியாக எதுவும் தெரியாது. நான் போன் செய்த பிறகு தான் வந்தேன். அரியலூரில் தான் எனது அண்ணன் இருக்கிறார். இரவு சம்பவம் நடந்தது. காலை சென்று பார்த்ததாக கூறிவிட்டு சாட்சி தற்போது முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு சென்று பார்த்ததாக கூறுகிறார். நான் அன்று காவல் நிலையத்திற்கு வந்தேன். எதிரிகளை பார்த்தேன். நான் அன்று மூன்று பேரை பார்த்தேன். சம்பவத்திற்கு மறுநாள் காலையிலேயே மூன்று பேரையும் காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன். நான் எதிரிகளின் உடையில் இரத்த கறையை பார்த்தேனா என்றால் மூன்றாம் எதிரியின் உடலில் இரத்த கறையை பார்த்தேன். இது சம்மந்தமாக நான் காவல் துறையில் காண்பித்தேனா என்றால் இல்லை. காவல் துறையினர் விசாரணையில் நான் அன்பழகன் என்கிற அன்பு ராக்கி ரமேசுடன் வேலை செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ராக்கி ரமேஷ் எனக்கு சித்தப்பா முறையாகும். அவர் என்ன வேலை செய்துக்கொண்டிருந்தார் என்று எனக்கு தெரியாது. ராக்கி ரமேஷ் மீது நிறைய கொலை வழக்குகள் உள்ளதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது அண்ணனுக்கும், ராக்கி ரமேசுக்கும் இடையே முன்விரோதம் எதுவும் இல்லை. என் அண்ணன் ராக்கி ரமேசுடன் நன்றாக பழகுவார் என்றும் , போவார், வருவார் என்றால் சரிதான். ராக்கி ரமேசுடன் சென்ற எனது அண்ணன் அவர் செய்த கொலைகளில் தொடர்புடையவர் என்பதால் அவர்களால் பாதிக்கப்பட்ட நபர் என் அண்ணனை கொலை செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எனக்கு கெடாரில் காவல் நிலையம் மூலம் தகவல் சொன்னார்கள். எனக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும், 1ம் பிரதிவாதி என்னை வைத்து வாழவில்லை என்பதால் சம்பவத்தை பற்றி

பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

***3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லாததால் 3ம் பிரதிவாதி தரப்பின் வாய்ப்பு முடிக்கப்பட்டது.***

**மறுவிசாரணை இல்லை.**